# ஓ பலஸ்தீனமே!

## உன் நதி - நிலம் - நிலவியும்
## புன்னகைகளாவும்



கலைவாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ பலஸ்தீனமே!

கலைவாதி

Mannar Study Circle.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R 15585

## சமர்ப்பணம்


1990 அக்டோபரில்
புலிகளினால் விரட்டியடிக்கப்பட்ட
வட புல முஸ்லிம்களுக்கு

**ஆசிரியரின் பிற நூல்கள்**

* உலகை மாற்றிய உத்தமர்
  (இயல்-இசைச். சித்திரம்)
* ஒரு வெள்ளி ரூபாய் (சிறு கதைகள்)
  (எழுத்தாளர் தேசியக் கவுன்ஸில் விருதுபெற்றது)
* கருவறையிலிருந்து கல்லறைக்கு
  (புதுக்கவிதைகள்)
* றோணியோக்கள் வாழுமா?
  (ஆய்வு நூல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவாதி கலீல்



பலஸ்தீனப் போராட்டப் படைப்பாளி

# நஜி-அல்-அலியும் ஹன்ஸல்லாவும்

ACCESSION NO: 15585
CLASS NO: 894.8111

நஜி-அல்-அலியின் ஓவியங்களுடன்

# O Palastine!

## Naji- al - ali & Hansalla

*Caricatures & Poems*

Author: **Kalaiwathy Kaleel**

First Edition: **November 1999**

Cover Design: **Kalaiwathy Kaleel**

Typesetted By: ***Dhanan Graphics,***
257 GH, Galle Road, Colomobo -6.
T.P.: 074-515546, 078-610433

Price: **Rs: 75/=**

Printed By: **New City Printers**
Sarikkamulla, Panadura

Publishers: **Mannar Study Circle,**
3 Moor Street, Mannar.
**Present Address:**
3, Horana Road,
Eluwila, Panadura

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிர்வு

பத்து வருடங்களுக்கு முன்னர்...

பொரளை 'பெய.்.யர் பீ.்.ல்ட் கார்ட'னில் இருந்து செயல்பட்ட 'பாமிஸ்' (Famys) என்ற சமூக சேவை அமைப்பினர், தங்கள் கொள்கைப் பிரச்சார நோக்குடன் ஒரு, மாத சஞ்சிகையை வெளியிட்டு வந்தனர்.

சஞ்சிகையின் மகுடம் 'பாமிஸ் மாசிகை (Famys Nonthly)

பாமிஸின் தலைவராக இருந்த, சிரேஷ்ட சட்டத்தரணி அல்ஹாஜ் எம்.எம். சுஹைர்தான் 'பாமிஸ் மாசிகை'யின் பிரதம ஆசிரியரும் கூட.

ஹ"னுப்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபராகவிருந்த என்.எம்.எம். றஸீன் 'பாமிஸ் மாசிகை'யின் ஆசிரியராகவிருந்தார். ஆசிரியர் பீடத்தில் வேறு சிலரும் பணியாற்றினர். சட்டத்தரணி எம்.எம். அபுல்கலாமும் அவர்களுள் ஒருவர்.

ஸ"ஹைர், எம்.பி.யாகி விட்டார். அபுல்கலாம் துறைமுக அதிகாரசபையின் ஒரு பணிப்பாளராக இருக்கிறார். ரஸீன், கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின், கனிஷ்ட பிரிவு (தமிழ்) அதிபராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

கொழும்பு ஹமீத்-அல்- ஹ"சைனி கல்லூரியில் ஆசிரியப் பணியாற்றிக் கொண்டிருந்த நானும், பாமிஸ் ஆசிரியர் குழுவில் ஒருவனாகவிருந்தேன்.

சிறுகதை, கவிதைகள், இலக்கியக் கட்டுரைகளை உள்ளடக்கிய இரண்டு பக்கங்களுக்கும் அத்தோடு சித்திர வேலைப்பாடுகளுக்கும் அடியேன் பொறுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளையில் வாராவாரம் என்னால் எழுதப்பட்ட ஒரு பத்திதான் 'இஸ்லாம் எங்கள் வழி! இன்பத் தமிழ் எங்கள் மொழி'

அந்த நாட்களில் மிகவும் விறுவிறுப்பான சற்று வித்தியாசமான ஒரு பத்திரிகையாக ''பாமிஸ் மாசிகை'' கணிக்கப்பட்டது. விற்பனையும் மிகப் பிரமாதமாக இருந்தது. அறபு நாட்டிலிருந்தெல்லாம் சந்தாக்கள் கிடைத்தன.

பத்திரிகைக் குழுவினர் சம்பளம் ஏதும் பெறாமலே, ஒரு சிறிய சன்மானத்தை மட்டும் பெற்றுக்கொண்டு ஒரு தொண்டாகவே உழைத்துக் கொண்டிருந்தனர்.

என் நிலையும் அதே!

ஆணித்தரமான அரசியல் கருத்துக்களும் தீப்பொறி பறக்கும் கவிதைகளும் சிந்தனை வயமான சிறுகதைகளும் படிக்க ஆவலைத் தூண்டும் கட்டுரைகளும் பாமிஸ் மாசிகையை ஜனரஞ்சகமாக்கியது!

ஒரு நாள்-

அறபுச் சஞ்சிகையொன்றைப் பார்த்துக் கொண்டிருந்த என் அருகில் வந்த அபுல்கலாம், அதில் பிரசுரமாகியிருந்த ஒரு கேரி-கேட்சரை (கூடார்த்த சித்திரம்) என்னிடம் காட்டி, விளக்கம் கேட்டார். எனக்கு அறபு மொழியில் பரிச்சயம் குறைவு என்பதனால் அதனைச் சிறிது நேரம் பார்வையிட்ட பின்னர் எனது யூகத்தை வெளியிட்டேன்.

''இது பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை முதன்மைப்படுத்தும் கருத்துப்படங்கள். இதில் கந்தலாடை, வெற்றுக்கால், மொட்டைத்தலையுடன் காணப்படுகின்ற சிறுவன் எல்லாக் கருத்துப்படங்களிலும் வருவதனால் அச்சிறுவன் தான் பிரதான பாத்திரம்'' என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இதனை நமது பத்திரிகையில் பிரசுரித்தால் என்ன?'' என்று கேட்டார் அபுல்கலாம்.

''பிரசுரிக்கலாம்! இக் கேரி-கேச்சரை வரைந்த கேரி-கேச்சரிஸ்ட் (Carricaturist) யார் என்று முதலில் கண்டுபிடிக்க வேண்டும். இலங்கை வாசகர்களுக்குப் புரியும் வகையில் விளக்கம் வேறு எழுத வேண்டும்'' என்றேன் நான்.

''எதற்கும் இப்படங்களுள் ஒன்றுக்கு முதலில் கவிதை ஒன்று எழுதுங்களேன்'' என்றார் அபுல்கலாம்.

பேனையையும் தாளையும் எடுத்தேன். பிறந்தது ஒரு கவிதை, சில நொடிகளில்.

உயிர் நீங்கி ஓய்ந்த போதும்
உதிரமே உயிராய் மாறும்
கரம் வீழ்ந்து சாய்ந்த போதும்
குருதியே கரமாய் மாறும்

ஒரு கரம் ஓயும் போது
மறு கரம் கல்லை ஏந்தும்
ஒரு உயிர் சாயும் போது
மறு உயிர் கல்லை மாற்றும்
பச்சிளம் கரங்களுக்கும்
பாரிய வலிமையுண்டே
நிச்சயம் அல்- அக்ஸா!
நிச்சயம் பாலஸ்தீனம்!

விறுவிறுவென்று எழுதப்பட்ட அக்கவிதை வீராவேசத்துடன் அமைந்திருப்பதாக அபுல்கலாம் கூறினார். உணர்ச்சியைத் தூண்டுவதாகவும் குறிப்பிட்டார்.

அக்கவிதைக்கு ''பிஞ்சின் கரத்தில் அக்கினிக் குஞ்சு'' என்று மகுடமிட்டேன், புரட்சிக்கவி பாரதியின் அக்கினிக் குஞ்சின் அருட்டுணர்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கூடார்த்த சித்திரத்தின் சொந்தக்காரர் 'நஜீ-அல்-அலீ' என்று பின்னர் கண்டுபிடித்தோம்.

யூதச் சிறையில் வாடிக் கொண்டிருந்த வேளையில் கொல்லப்பட்ட வரலாற்றையும் படித்தோம்.

எனவே நஜீ-அல்-அலியின் கருத்தோவியங்கள் அனைத்தையும் தேடிப்பிடித்துப் பிரசுரிப்பதென்றும் தீர்மானித்தோம். முடிந்த அளவு முயன்று நஜீ-அல்-அலியின் சித்திரங்களைச் சேகரித்தோம்.

படமும் கவிதையுமாக மாதாமாதம் மாசிகையில் மலர்ந்த குருதிப்பூக்கள் தான் இன்று ஒரு தொகுப்பு (தோப்பு) ஆகியுள்ளது.

கவிதைகளை யாத்த கவிஞரின் பெயரை ஒரு "திரில்" லுக்காக புனைப்பெயருக்குள் புகுத்தினோம்.

"இன்ஸான்" வார ஏட்டின் ஆசிரியர் அபூதாலி்ப் அப்துல் லதீ்ப் எனக்குச் சூட்டிய புனைப்பெயரான "சர்தார்" என்ற பெயர் மிகப் பொருத்தமாகப் பட்டது. நஜீ-அல்-அலியின் கருத்தோவியங்களுக்கான எல்லாக் கவிதைகளும் "சர்தார்" என்ற பெயரிலேயே வெளியாகின.

இக்கவிதைகள் அறபுக் கவிதைகள் என்றும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கலாம் என்றுமே நீண்ட நாட்களாக ஒரு கருத்து நிலவி வந்தது. இந்நாட்டிலுள்ள இரண்டொரு முற்போக்குக் கவிஞர்கள் கூட, ஆங்கில மூலத்திலிருந்து பெறப்பட்டிருக்கலாம் என்று கருதியிருந்தனர். எமக்கு வந்த கடிதங்களும் கூட அதனையே பறை சாற்றின. "யார் இந்த சர்தார்" என்றும் துலாவத் தொடங்கினர்.

ஆனால், உண்மையில், சித்திரங்களைப் பார்த்துக் கற்பனையில் வடிக்கப்பட்ட கவிதைகள் தாம் இவை என்று பின்னர் தெரிந்து கொண்டதும் ஆச்சரியமடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கவிதைகளில் சிலவற்றை சிங்களத்தில் மொழிபெயர்ந்து ஒரு கட்டுரையும் எழுதியிருநதார் பிரபல பத்திரிகையாளர்... ஐயூப், ''லங்காதீப'' பத்திரிகையில்.

ஒரு, அராபிய கூடார்த்த சித்திரக் காரருடைய அங்கத ஓவியங்களுக்குத் தமிழ் மொழியில் கருத்தோவியம் புனையப்பட்டது அதுதான் முதல்தடவை என்று கருதுகிறேன், நான் அறிந்த வரையில்

''நஜீ-அல்-அலியும் ஹன்ஸல்லாவும்'' என்ற மகுடத்தில் பாமிஸ் மாசிகையில் வெளியாகிக் கொண்டிருந்த இந்தக் கருத்தோவியக் கவிதைளுக்கு நல்ல வரவேற்பு இருந்தது.

'இதனை எப்போது நூல் வடிவில் வெளியிடப் போகிறீர்கள்'' என்று கேட்டுப் பல கடிதங்கள்.

ஆனால்.....

பொதுத் தொண்டில் ஈடுபடும் பெரும்பாலான அமைப்புக்களுக்கு நேர்ந்த கதிதான் பாமிஸுக்கும் நேர்ந்தது. ''பாமிஸ்'' ''இழுத்து'' மூடப்பட்டது. அதன் உடைந்த ஜன்னலூடே ''பாமிஸ் மாசிகை'' காற்றில் பறந்தது.

புதுமைக் குரலைப் போல, இன்ஸானைப் போல, எழுச்சிக் குரலைப் போல, பாமிஸ் மாசிகையும் ''கப்ரில்'' அடங்கி ஒடுங்கியது.

ஆயினும், நஜீ-அல்-அலியின் கருத்தோவியங்களை நூலுருவாக்க வேண்டுமென்ற எனது தணியாத தாகம், அல்லது அடங்காத ஆவல் அடிக்கடி விஸ்வருபம் எடுத்துக்கொண்டேயிருந்தது.

எவ்வளவோ முயற்சி! ''முயற்சி'' என்று சாதாரண சொல்லைப் பிரயோகிக்க முடியாது! ''பகீரதப் பிரயத்தனம்'' என்று கூறினால் அது மிகை பட்ட கூற்றன்று. ஆனால் அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தும் நரிக்கொம்பாய்... முயற் கொம்பாய்... குதிரைக் கொம்பாய்....

பத்து வருடங்களின் பின் என் ''கல்பு'' அடங்கி ஆசுவாசப்பட்ருக்கிறது. காற்றோடு கலந்து (மறைந்து) விடுமோ என்ற இக் கருத்தோவியங்கள் கல்லில் பதிக்கப்பட்டு விட்டன.

''கல்லின் மேல் எழுத்துக்கு நேர்!''

இதனை நூலாக்க முடியாமல் போய்விடுமோ என்று நாளெல்லாம் அழுதேன்

ஏழை (எழுத்தாளன்) அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும் என்பார்கள். இன்றைய பிரசுரம், கூரிய வாள்!

ஏற்கனவே நான்கு நூல்கள் போட்டிருக்கிறேன். மன்னாரில் மூன்று. கொழும்பில் ஒன்று. இரண்டு கையைக் கடித்தன. ஏனைய இரண்டும் காலையும் சேர்த்துக் கடித்தன.

இன்றைய காலவோட்டத்தில் நூல் வெளியிட்டால் எப்படியும் விற்றுத் தள்ளிவிடலாம் என்றொரு நம்பிக்கை எழுத்தாளர்களுக்கு! ஆனால் வெளியீட்டு விழாவை ஒரு கல்யாண வீடு போல் நடாத்த வேண்டும்! அதில் நம்பிக்கையில்லை எனக்கு! விருப்பமும் இல்லை!

இந்தியாவில் இருப்பது போல், 500 பிரதிகளை அரசே கட்டாயமாக, ''காசுகொடுத்து'' வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற திட்டமெல்லாம் இங்கில்லை. அமைச்சு விரும்பினால் மட்டுமே ஒரு ஐம்பதோ நூறோ!

இவையெல்லாம் இலட்சியமல்ல! இலட்சியமே வேறு! அது ''ஹன்ஸல்லா'' நூலுருப்பெற வேண்டும் என்பதே!

விற்பனை, போட்ட முதலை மீட்டுக் கொள்வது என்பதெல்லாம் இரண்டாம் பட்சமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அரசு ஆட்சிபீட மேறியபின்னர், எனது ''இனிய'' நண்பர்களினால் வானொலி, ''தினகரன்'' ஆகியவற்றிலிருந்து தூக்கியெறியப்பட்டேன்! மூன்று வருடங்களின் பின் ''நவமணி'' அழைத்தது, இருகரம் நீட்டி! ''மறுபடியும் பூதம் கிளம்பிவிட்டதே'' என்றார்கள்.

சின்ன வயதில் திராவிட முன்னேற்றக் கழக எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் ஈடுபாடு எனக்கு. விசேடமாகக் கலைஞர் கருணாநிதியின் அடுக்குத் தொடர்களில் அதீத விருப்பம்.

மனோகரா திரைப்படம், பராசக்தி, அனார்கலி, சேரன், செங்குட்டுவன்,சாம்ராட் அசோகன், சோக்ரடீஸ் நாடகங்களெல்லாம் தண்ணீர்பட்ட பாடு எனக்கு, முழுவசனங்களும்... இன்றும் கூட! அளுத்கமை ஆசிரியர் கலாசாலை மாணவிகள், நான் வாயால் கூறக்கூற அப்படியே எழுதிக் கொண்டு நாடகமாக நடிப்பார்கள்.எனது நினைவுத்திறன் அப்படி!

நான் அடிக்கடி கையாளும் அதீத பற்றுக் கொண்ட, கருணாநிதியின் வசனமொன்று, மனோகரா திரைப்படத்தில்... முதல்வசனம்.

அவ்வசனம் இந்நூலைப் பொருத்த அளவில் மிகப் பொருத்தமாக இருக்கும் என்பதால் இங்கே...

"வெற்றி! வெற்றி! வேதனையைப் பொருட் படுத்தாதவனுக்கு கிடைத்த வெகுமானம்! நான் அனேக வருடங்களாகப் பட்ட பாட்டுக்குச் சரியான அறுவடை..."

எப்படியோ நஜீ-அல்-அலீ இன்று அச்சு வாகனம் ஏறி விட்டது.

இதனை வெளியிட்டு வைக்கிறது மன்னார் வாசகர் வட்டம். (Mannar Study Circle) எனது முதல் இரண்டு தொகுதிகளை வெளியீடு செய்ததும் இவ் வட்டந்தான். அதற்கு என்றென்றும் நன்றிக்கடப்பாடு உடையேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடம் ஒரு நூல் வெளிக் கொணர்ந்திருக்க வேண்டும். பதினொரு வருடங்களின் பின் இந்நூல் வெளியாகிறது. சிறு நூல்தான். சிலவேளைகளில் பெருநூல் ஒன்றுக்கான கால்கோளாகக் கூட அமையலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் வடபுலத்து முஸ்லிம் களைத் துரத்தியடித்து ஒரு தசாப்தமாகிவிட்டது (1990). அந்த இரத்தத்தை உறைய வைக்கும் ''கறுப்பு அக்டோபர்'' நினைவாக வருடா வருடம் நான் வடித்து வைக்கும் எண்ணக்குமுறல்களில் ஒன்றையும் இத்தொகுப்பில் சேர்த்துள்ளேன், பொருத்தம் கருதி.

ஈற்றிலே

எனது கவிதைகளைத் துலாம்பரமாக்கிய ''பாமிஸ் மாசிகை''க்கும்

கணனி வடிவமைப்பைச் செய்து தந்த வெள்ளவத்தை தனன் கிறபிக்ஸ் நிறுவனத்தாருக்கும்,

அழகிய முறையில் அச்சிட்டுத் தந்த பாணந்துறை நியூ. ஸிற்றி அச்சகத்தாருக்கும்.

அத்தோடு, காசு கொடுத்து இக் கவித் தொகுப்பை ஆசையுடன் வாங்கி ஆதரித்த அன்பர்கட்கும் என் இதயங்கமழ் நன்றி என்றென்றும் உரித்தாகட்டும்......

நூல்பற்றிய விமர்சனங்களை வரவேற்கிறேன்.

கலைவாதி கலீல்
பிரதி அதிபர்
அளுத்கமை ஆசிரியர் கலாசாலை

இல.: 3 ஹொரணை வீதி,
எலுவிலை
பாணந்துறை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாமிஸ் மாதிகை **(FAMYS NONTHLY)** யில் வெளியான குறிப்பு:

## யார் இந்த நஜி-அல்-அலி?

அரபுலகின் தலைசிறந்த கூடார்த்த சித்திரக்காரரான (Carricaturist) நஜி-அல்-அலி அவர்களையும், பலஸ்தீன கூடார்த்த சித்திரங்களையும் வாசகர்களுக்கு அறிமுகப் படுத்துவதில் மகிழ்ச்சி யடைகிறோம். இஸ்ரேலால் கைப்பற்றப்பட்ட காஸா, மேற்குக் கரைப் பகுதிகளில் கடந்த 10 மாதகாலமாக தொடர்ந்து நடைபெற்றுவரும் போராட்டம் ஆரம்பித்த காலப்பகுதியில் நஜி-அல்-அலி இனந் தெரியா தோரால் படுகொலை செய்யப்பட்டார்.



இஸ்ரேலுக்கும், பலஸ்தீன விரோதப் போக்கைக் கடைப்பிடிக்கும் அரபு ஆட்சியாளர்களுக்கும் எதிரான நஜி-அல்-அலியின் கடுமையான விமர்சனங்களின் காரணமாக அவருக்கு எதிரிகள் அதிகரித்தனர்.

கொலை செய்யப்படுவதற்குச் சில தினங்களுக்கு முன்னர் அவர் லண்டனிலிருந்து வெளிவரும் Inquiry மாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழுக்கு அளித்த பேட்டியிலிருந்து பெறப்பட்ட சில கருத்துக்கள்:

''நான் 10 வயதுச் சிறுவனாக இருக்கும் போதுதான் (1948) எமது தாயகமான பலஸ்தீனத்திலிருந்து எஹுூதி இஸ்ரேலர்களால் நாம் விரட்டப்பட்டோம். அகதி முகாம்களில் ஏழைப் பலஸ்தீன சிறுவர்களாகிய நாம் அல்லற்பட்டோம். அகதி முகாம்களில் பாலை மணலில் பாதணிகள்கூட இன்றிப் பரிதவித்துக் கொண்டிருந்தோம்.

இஸ்ரேலிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டபோது நாம் பலமுறை சிறையிலடைக்கப்பட்டோம். அப்போது சிறைக்கூடச் சுவர்களில் எனது உணர்வுகளைச் சித்திரமாக்கினேன். இவ்வாறுதான் கூடார்த்த சித்திரங்களை எழுத உந்தப்பட்டேன். நாளடைவில் ஒவ்வொரு ஆர்ப்பாட்டத்தின்போதும் நான் தவறாது தூரிகையுடன் சென்று எமது போராட்டத்தை சித்தரிக்கும் சித்திரங்களைச் சாலையோரச் சுவர்களிலும் கட்டிடச் சுவர்களிலும் வரைந்துவிட்டு வருவேன்.

எனது சித்திரங்களின் பிரதான பாத்திரமாக 10, 11 வயது மதிக்கத்தக்க பலஸ்தீனச் சிறுவனையே எடுத்துக்கொண்டேன். இந்தச் சிறுவன் பாத்திரத்துக்கு (Character) 'ஹன்ஸல்லா" எனப்பெயரிட்டேன். அன்று அகதிகளாக விரட்டப்பட்ட என்னைப் போன்ற சிறுவர்களை மட்டுமல்ல, இன்று கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் இஸ்ரேலிய ராணுவத்துக்கு எதிராக (கல்லெறி)ப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் பலஸ்தீன சிறுவர்களையும் எனது 'ஹன்ஸல்லா' பிரதிபலிக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலணிகூட இன்றி காற்சட்டை, ஷேர்ட்டுடன் விரட்டப்பட்ட என்போன்ற ஏழைப் பலஸ்தீன சிறுவர்களையே ஹன்ஸல்லா' பிரதிபலிக்கிறான். உண்மையில் 'ஹன்ஸல்லா' போன்ற ஏழை பலஸ்தீனச் சிறுவர்களே அகதி முகாம்களில் அடிமைப்பட்டு கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் கஷ்டப்பட்டு இன்று இஸ்ரேலிய ராணுவத்துக்கு எதிராகப் போராடுகிறார்கள்.

எம்மைச் சூழ்ந்துள்ள அரபு ஆட்சியாளர்களே எமக்கு எதிராகச் சதிசெய்தார்கள். பலஸ்தீன விடுதலை இயக்கமும் இவர்களது வலையில் வீழ்ந்தது வருந்தத்தக்கது. இல்லாவிட்டால் லெபனானில் இஸ்ரேல் காலூன்றியிருக்க முடியாது. கடந்த காலங்களில் முகாம்களின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களுக்கு முகாம்களிலுள்ள பலஸ்தீனச் சிறுவர்களே தாக்குப் பிடித்திருக்கிறார்கள். எமது முகாம்கள் மீது இஸ்ரேலிய ராணுவ விமானங்கள் குண்டுமாரி பொழிந்த போது பலஸ்தீனச் சிறுவர்கள் RPG தாக்குதல்களை நடத்தினார்கள். அப்போது, PLO வீரர்கள் எங்கிருந்தார்கள்?

எனவே, நாம், எமது எதிரிகளை அடையாளம் காண வேண்டும். அறபியராயிருந்தால் என்ன? இஸ்ரேலியராய் இருந்தால் என்ன? எதிரிகள் எதிரிகள்தான்."

இவ்வாறு நஜி-அல்-அலி அந்தப் பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

போராட்டத்தைச் சித்தரிக்கும் கூடார்த்த சித்திரங்களை வரைந்து கொண்டிருந்தபோதும் பொறியியல் துறையில் பயின்று இயந்திர, மின்னியல் பொறியியலாளராக வெளியேறிய நஜி-அல்-அலி அவர்களுக்கு அந்தத் துறையில் தொழில்புரிய சூழ்நிலை அனுமதிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அல்-ஹுறயா' என்ற அரபு சஞ்சிகைக்கு கூடார்த்த சித்திரங்கள் வரைய ஒப்பந்தம் செய்யப்பட்டார். பின்னர் குவைத் வாரமலரான 'அல்-தாலியா'வில் பத்திரிகையாளராகச் சேர்ந்தார். அதிலும் கூடார்த்த சித்திரங்கள் வரையலானார். நாளடைவில் அவரது அரசியல் கூடார்த்த சித்திரங்களுக்கு அதிக இடம் ஒதுக்க வேண்டிய நிலை இந்த வாரமலருக்கு ஏற்பட்டது. இவரது கூடார்த்த சித்திரங்கள் அரபுலகில் ஜனரஞ்சகமடைந்தன. வாரமலருக்குத் தாக்குப் பிடிக்க முடியவில்லை. எனவே பிரபல அரபுலகத் தினசரிகளில் அவரது கூடார்த்த சித்திரங்கள் இடம்பெறலாயின.

நஜி-அல்-அலி முஸ்லிம் உலகில் தனி இடம் பெற்றார். 'ஹன்ஸல்லா' பலஸ்தீனப் போராட்டத்தின் மறக்க முடியாத பாத்திரமாகப் பிரபல்யம் பெற்றான்.

'பலஸ்தீனப் போராட்டம் பற்றிய நஜி-அல்-அலி அவர்களின் கூடார்த்த சித்திரங்களையும் பலஸ்தீனச் சிறுவன் 'ஹன்ஸல்லா' வையும் 'சர்தார்' அவர்களின் கவிதையுடன் தொடர்ந்து பிரசுரிக்கவுள்ளோம். லிபிய அரபுக் குடியரசிலிருந்து வெளிவரும் 'ரிஸாலத் அல்ஜிஹாத்' மாத இதழில் பிரசுரமான அவரது கூடார்த்த சித்திரமும் அதற்கான கவிதையும் இங்கு இடம் பெற்றுள்ளது.

~ சட்டத்தரணி மு.மு. அபுல்கலாம்
ஆசிரியர் குழு - பாமிஸ் மாசிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் நீங்கி ஓய்ந்த போதும்
உதிரமே உடலாய் மாறும்
கரம் வீழ்ந்து சாய்ந்த போதும்
குருதியே கரமாய் மாறும்

ஒரு கரம் ஓயும் போது
மறுகரம் கல்லை மாற்றும்
ஒரு உயிர் சாயும் போது
மறு உயிர் கல்லை ஏந்தும்

பச்சிளங் கரங்களுக்கும்
பாரிய வலிமையுண்டே
நிச்சயம் அல் - அக்ஸா!
நிச்சயம் பாலஸ்தீனம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீ!

கல்லில் கசியும் குருதித் துளிகள்
கானகப் பூவை மலர்விக்கும்
கல்லைப் பிளந்தும் செடி துளிர்க்கும்
பூக்கள் மலர்ந்து தீ கக்கும்

கையின் உறுதி கல்லின் வலிமை
காபிர் கூட்டம் நடுநடுங்கும்
வெள்ளைப் பிறையும் வெண்போர்வாளாய்
துள்ளி எழுந்தே துணை சேர்க்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருவான்

கண்ணை உறுத்தும் முள்ளாய்த் தைக்கும்
கம்பிப் பின்னல் வதை செய்யும் - முட்
கம்பியின் பின்னால் கதை தொடரும்!
கதையின் பின்னால் கடல் சிலிர்க்கும்!
கண்ணீர்த் துளியின் உஷ்ணத் தீயில்!
கடலின் அடியில் உலை கொதிக்கும்!
வண்ண நிலவும் கரு-மை பூசி
தன்னைப் போர்த்தி, இருளாக்கும்!

வட்ட முகத்தின் சோகத்தூசு
தட்டித் துடைத்தால் நிலவுதிக்கும்!
வண்டுக் கண்கள் மயக்கம் விலக்கி
கொள்ளித் தணலாய் கொதித் தெழுகும்!
சென்ற கணவன் திரும்பி வருவான்
என்றே உணர்வு இடித்துரைக்கும் - அவன்
'வென்று வருவான்! கொன்று வருவான்
கொண்டு வருவான் பலஸ்தீனம்!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழும்

இருளரசன்
வான் சுவரில்
சட்டிக்கரி பூசி
சாகசச் சிரிப்புதிர்க்க
பற்கள் தெரியவில்லை!

வானின் இருளோ
பலஸ்தீனம் போல...
இந்த இருட்டு
கன்னியரின் முகம்போல
காளையரின் அகம்,
மழலைகளின் மனம்போல

வான் இருட்டில்
வடிவாய்த் தெரியும் முட்கம்பி...
கூறும் கதைகள் கோடி! கோடி!

முறுக்கிப் பிழிந்த முள்ளுக்கம்பி
'ட்ரகுலாவின்'வின் பற்கள் போல
இரத்த விடாயில் ஏங்கித் தவிக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இடையில் பிளந்த இரும்புவேலி
இதயப் படத்தை இருளில் வரையும்!
இரும்புவேலி வடிவம் சிதைந்து
இதயத் தூளி ஆகி(டி)டுமே!

முனைகள் உடைந்து கதிர்கள் எழுந்து
முழுதாய் விரிந்து முகை வீசும்
பூக்கள் மலர்ந்து புதுமை மிளிர்ந்து
பாக்கள் வடித்துப் பலபேசும்!

மேற்கில் அமிழ்ந்த பரிதிக்குமரன்
கிழக்கில் எழுவான் நிச்சயமே!
பரிதி நிகர்த்த பாலஸ்தீனம்
மீண்டும் எழுதல் சத்தியமே!

15585

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூர்

ஆழக் கடலில்
மீளாப் பயணம்!
கருமைக் கடலில்
அருமைப் பயணம்!

அலையின் அமைதி
மௌன மூச்சே
நெஞ்சின் தாகமாய்
விம்மும் வெண்நுரை!

எங்கு பார்க்கினும் இருட்டோ இருட்டு
கறுப்புக் குடையைக்
கடலின் மீது கவித்தாற்போல கருமைப் பூதம்.....
வலையைப் பின்னி வாட்டும் சிலந்தி!

படகின் மீது பாலஸ்தீனன்!
தடித்த ஆடை - தலை முகத்திரை,
கனத்த 'பூட்ஸ்', கையில் கன்னம்,
முதுகில் துவக்கு, முகத்திற் கவலை,
உடலில் உறுதி! உளத்தில் தளர்வு,
விடிவை நோக்கும் விழியின் ஏக்கம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எழுந்து நிற்கும் பாய்மரக் கம்பம்
இதயங்கவரும் 'மினாரா' போல...
கம்பத்திடையே வளைந்த வெண்பாய்...
காற்றின் இடையே, வளைந்த வெண்பாய்....
காற்றின் இடையே, நெளிந்து ஜொலிக்கும்!
பிறையைப் போன்ற தோற்றம் அதற்கு
பிறகேன் கவலை பலஸ் 'தீ' னனுக்கு,
இருமுனை யிலும் கூர் - அது
எங்கள் சின்னம்! இளம்பிறை பார்!

கூர் வெண் ஒளிர் பிறை
போர் வாள் என உரை!

உலகிருள் நீக்கி
ஒளி தரும் பிறைதான்...
உலுத்தர்கள் உயிரை
உறிஞ்சிடும் கூர் வாள்!

ஓ! பலஸ்தீனனே!
முதுகைத் திருப்பிப் பிறையைப் பார்
அதன் கூர்கூறும்,
கதையைக் கேள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓ! பலஸ்தீனனே
ஒரு முனை வீரம்!
ஒரு முனை விவேகம்!
இடையில் ஒளிரும்
கனலைக் கிழித்து
எழும் உன் தேசம்
அது பலஸ் - தீ - னம்
அது பலஸ்தீனம்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க ல்

முள்ளில் வாழ்க்கை
விஷ முள்ளில் வாழ்க்கை!

முள்ளின் படுக்கையில்
முகங்குப்புறக்
கிடக்கிறது. பாலஸ்தீனம்!
அதனுள் அமிழ்ந்து எழ, எழ முயன்று
ரணத்துள் வழுக்கும்
மஸ்ஜித் அக்ஸா!

முள்ளில் வாழ்க்கை!
விஷ முள்ளில் வாழ்க்கை!

மனித உயிர்கள்
மழலை முகங்கள்
குமரிப் பெண்டிர்
கூனற் கிழவர்,

முள்ளின் விஷத்தால்
முடங்கிப் போயுளார்!
சொட்டும் ரணத்துள்
சோர்ந்து கிடக்கிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும்
முள்ளை முள்ளால்
எடுக்க எண்ணும்
இரும்பு உளத்தார்
எழுந்து கொண்டார்

நிமிர்ந்த துவக்கில்
எழுந்த புகையில்
பேரீச்சை மரமும்
பிறையும் பொழுதும்
அமைதிப் புறாவும்
அடங்கிப் போகுமா?

மேகந் திரளுது
செந்தீக் குழம்பாய்!
பரிதி சொலிக்குது
இரத்தப் பிளம்பாய்!
வானில் எழுகும்
வட்டப் பூக்கள்
நீண்ட தண்டு
நிழலின் மடல்கள்
எல்லாம் முள்ளாய்!
எல்லாம் முள்ளாய்!
எழுந்தே உறுமுது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானை நோக்கும்
அகதியின் கண்கள்
தீயைக் கக்கும்
தீட்சண்யமாமோ?

வானை நோக்கும்
கைகள் ஏந்தத்
துவக்கில்லையென்றால்...
துவக்கில்லை... யென்றால்
கல்லை ஏந்தும்
கல்லை ஏந்தும் - அது
சிறு கல்லையும் ஏந்தும்!

இது முற்போர்
அத்தோடு கற்போரும் கூட...

ஏ! ஸியோனிஸ்டே!!
கல்லைக் கொண்டு
யானைப் படையைப்
பூண்டோடொழித்த
புரட்சி வரலா(று)
எம்மிடம் உளது
ஜாக்கிரதை!!

-நன்றி: தினகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜிஹாத்

சென்றவன் மீண்டான்!
உடலோடு,
உயிர் ஓட...

வென்றவன் வருவான் என
விழி ''பூத்த'' வேளையில்
சென்றவன் மீண்டான்
உடலோடு...

கூட்டைச் சுமந்த
குருவி பறந்தது
குருதித் திரையில் உடலைப் போர்த்தி!

கறுப்பு உடையுள் மேனி புதைத்து
கலங்கும் பெண்டிர் அறுவர்! கண்கள்
கக்கும் கண்ணீர், கண்ணீர் ஆமோ...
செந்நீர்தானோ!

நீதி கேட்டுப் போலிக் கூண்டில்
நெஞ்சை நிமிர்த்தி நின்ற வேளை
கோழைப்பாம்பு கடித்தாலே
உயிர்
ஏழையாகி இழந்து போச்சு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உயிரைப் பறிக்க முடிந்ததனால்
உடலைப் பறிக்க முடிந்ததனால்
உணர்வைப் பறிக்க முடிந்ததாமோ...

இனத்துக்கான இந்தப் போரில்
இறப்பதெல்லாம் வரவே!
இறந்ததெல்லாம் எழும்!

எழும் எழும் ''பீனிக்ஸ்'' போல
எழும் எழும் மீண்டும் மீண்டும்!

ஒரு ''ஜிஹாத்'' தின் அந்தம்
மறு ''ஜிஹாத்'' தின் ஆதி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அஞ்(ர்)சேல்

ஹே ஹன்ஸல்லா...
பின்னால் கரம்
பிணைத்து நின்று
என்ன பார்க்கிறாய்?

கந்தல் ஆடை
தோளில் உறுத்த
வெற்றுக் கால்கள்
பூமி அழுத்த
பொசுக்கும் பாலை
புதை மணல் மீது
நின்று நோக்கும் நிலை என்ன?

உந்தன் நாட்டின்
அஞ்சல் அட்டை
உலகு எங்கும் சுற்றி வருகும்
காட்சி தன்னைக் கண்டுதானோ
கற் சிலையாய் சமைந்து போனாய்

''என்றோ ஒருநாள் எங்கள் நாட்டில்
இருந்து எழுகும் அஞ்சல் தலையில்
''அல்-அக்ஸா'' அரசு ஓச்சும்!
அறுமுனை விலங்கு, அறுந்து சிதறி
முட்கள் முறிந்து முடங்கிப் போகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூதப் பேய்கள் மூலை தேடி ஓடிப்பதுங்கி
உழன்று தளர்ந்து காய்ச்சல் கண்டு
கருகிப் போகும்

"சியோ" சிலந்தி,
முதற்கிப்பலா- முனையாய் ஒளிரும்
தங்க முகட்டின்
தகதகப்பில் - பொங்கி எழுகும் தீப்பிளம்பில்
பொசுங்கிக் கருகிப் புகைந்துபோகும்!
எங்கள் தேச அஞ்சல் அட்டை
எட்டுத் திக்கும் சுழலும் வேகம்
எலியைப் போல வளையைத் தேடி
ஒளியும் யூதர் உயிரும் போகும்

என்ற உந்தன்
எண்ணம் இன்று...
கனவு!
நாளை நனவு!
நினைவிற் கொள்
நிமிர்ந்து நில்!

தெறித்த இரத்தச்
சிவப்பின் விதைப்பில்
வெள்ளை அஞ்சல்
விரைந்து செல்லும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தன் தலையை
உற்றுப் பார்க்கிறேன்
அங்கோர் உதய சூரியன்
ஒளிந்து உளதே!

ஹே ஹன்ஸல்லா...
கவனித்தாயா?

---

பலஸ்தீனச் சுதந்தர ராஜ்யப்
பிரகடனத்துக்கு முன்
எழுந்த எண்ணம்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுவேன்



பொறு மகனே பொறு!
எழுதி விட்டு வருகிறேன்
பொறு மகனே பொறு!


எதிர்காலம் உனதே
எனதல்ல......
மலைகளை அகற்றிய
மூடக் கிழவனின்
கதை தெரியுமா உனக்கு...
மலைகள் வளராது - சிதைத்துக்
குறைக்கலாம்....
நான் இறந்தால்.... நீ
உன்னைத் தொடருவான், உள் பிள்ளை
எதிர்காலம் உனதே!

அடிமைச் சகதியில்
புதைந்து கிடக்கும் நீ
எழ வேண்டும்! எழ வேண்டும்!
கோடிக்கால் பூதமாய்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளை அறுத்து எழு மகனே...
கதிர் தெறிக்கும் பரிதியென...

ஹே ஹன்ஸல்லா....!
வில் லெடுத்து போர் புரிந்தோம்...
‘‘ஷெல்’’ லடித்துப் போர் புரிந்தோம்
நான்
‘சொல்’’ லெடுத்துப் போர் புரிவேன்
நீ.... சிறு
‘‘கல்’’ லெடுத்துப் போர் புரிவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு கல்



கல்லறையிலிருந்து
கையொன்றெழுந்து
கல்லைப் பற்றும்
சொல்லெறியின் ஓர்மை!
கல்நுனியின் கூர்மை
கழன்று சுற்றும்!
புறா முடி தரித்த
புரட்சிப் பெண்முகம்
பொலிவாய் ஜொலிக்கும்
பெரு நிலம் பறித்த
போதிலும் கரத்தில்
ஒலிவ் இலை துளிர்க்கும்
நடுநடுங்கியலறி
நாக்குளறும் யூதன்
கிடுகிடென அதிருவான்
கடகடவென நகைத்து
தடம்பதித்து எழுந்து
ஹன்ஸல்லா மகிழுவான்
ஆயிர மாயிர
மாயிரம் யூதர்கள்
அணிதிரண் டாலுமே
ஆயுத மாயுத
மாயுத மொன்றுள....
அது சிறுகல் லாகுமே!
அது சிறுகல் லாகுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறப்பு

வெளியேறு! வெளியேறு!
பலஸ்தீன மண்விட்டு
வெளியேறு! வெளியேறு!

ஏ ஆக்கிரமிப்பாளனே!
காலிழந்த போதும்
என் கரத்துக்கு வலிமையுண்டு
ஒரு கால்தான் ஊனம்
மறுகாலில் உளதோ
எங்களது மானம்!
ஆமாம் - மானம்!

நொண்டிக் கால் என்பதால்
நொடிந்து போய்விடேன்!
தெண்டித்தால் கண் எதிரே
தெரிவது பாலஸ்தீனம்

காலுக்கு உறுதுணை:
கையில் இருப்பது தடியல்ல
திறப்பு - அது இரும்பு

பலஸ்தீனப் பேழையைப்
பூட்டியாயிற்று
இனிப் புறப்படு துரோகியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உனக்கு வேலையில்லை இங்கே
வெளிக்கிடு! வெளிக்கிடு!
எங்கள் பூமியை
எடுத்துக் கொள்ளவா...
இங்கு வந்தனை
எல்லாம் கனவு...
ஜாக்கிரதை!

பாலைத் திரையில் தடமிடும்
திறப்பின் பாதப் பதிவுகள்
இதயத் திரையிலோ...
எங்கள் இனிய
பலஸ்தீனம் தடமிடும்

எனவே இனியுனக்கு
இங்கேயில்லை வேலை!
வெளிக்கிடு!

பலஸ்தீனப் பேழையைப்
பூட்டியாயிற்று
திறப்பு என் கையில்
தெரிந்துகொள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



15585

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவால்

வெட்ட வெட்டத்
தழைக்கிறது
மரமல்ல...
நெஞ்சு உரம்!


அடியோடு சாய்ந்தாலும்
அது எழும் பூதமாய்...
கோடிக்கால் பூதமாய்

கைகள் பதற...
கிழடு
சருகாய்ச் சாயும்!
ஆயினும்
கல்லைப் பற்றிப்
பிஞ்சு உடலும்
பெரிதாய் எழும்..
கிழட்டு "யங்கி"யின்
கீழ்த்தாடை முறிக்க....

பீறிட்டெழும்
நீரூற்றென...
எகிறித் தாவும்
எரிமலைக் குழம்பென...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அராஜகக் கோடாரி
ஆவேசத்தின் முன்
மழுங்கிப் போகும்



உரிமைக் கல்
உயரே எழுந்து
சண்டமாருதச்
சமர் புரியும்
எழுச்சிப் பதாகை
எண்டிசையும்
சுழன்று சுழன்று
சுதந்திரம் பாடும்

"பாலஸ்தீனத்தைச்"
சாய்க்க எண்ணும்
சண்டாளனே!
உனக்கோர்
சவால் நான்
ஜாக்கிரதை!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# INஉம் OUTஉம்

ஏ ஸியோ....
உந்தன் 'லிப்ட்' இது
உள்ளே வா எனும் அழைப்பு அங்கே In என
இன்முகம் காட்டும்!

அழைப்பின்மீது ஆறுகால்ப் பூச்சியாய்
அறுமுனை நட்சத்திரம்
அது உன் (அவ) மானச் சின்னம்
என் சினம்!

உள்ளே அழைக்கிறாய் உரிமையாய்
அராபிய வீட்டில் நீ கால் பதித்து
'இன்' எனும் போட்டை
இதமாய் மாட்டி, எவரை ஏமாற்ற
எழுந்தனையோ....

அராபிய மண்ணில் அடாவடித்தனங்கள்
அட்டகாசங்கள் அனர்த்தங்கள்
படுகொலைகள்- பாதகங்கள்
பள்ளிச் சிறுவரை கல்லறைக் கனுப்பல்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னோரன்ன கொடுமைகள் புரிந்து
இதழ்க் கொடுப்பால் உமிழ்நீர் வடிய
இறுமாந்திருக்கும் நீயா?
வேதம் ஓதுக்கிறாய்?

நடுநிலையாளர் - நியாயவான்கள்
'இன்' என அழைத்தால் - உள்ளே நுழைகிறார்
லிப்டின் 'கைப்பிடி' பற்றித் திறந்து....
உள்ளே பார்த்தால் அங்கோர் தடை
லிப்டுக்குள்ளே முரட்டுக் கல்லால் கட்டி
வைத்துள
கற்சுவர் மீது காணும் வாசகம்
'வெளியே போ'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறிவு

பேனா முறிந்ததுவோ...
புறா அழுகிறதே!
போர்க்களத்தில் ஒப்பாரி
புறாவுக்குத் தெரியாதா?

மனிதப் பிண்டங்கள்
மாமிச மலைகள்
பிண மேடுகள்
நிண வாடைகள்...
அதனைக் கண்டா
அழுகிறது புறா....

சமாதான வரிகளை
சதா வரைந்து வரைந்து
இறுமாந்திருந்த
இந்தப் பேனா
ஏன் முறிந்ததுவோ...

வெட்ட வெட்டத் தழைக்கும்
முறிய முறியத் துளிர்க்கும்
கொல்லக் கொல்ல உயிர்பெறும்
பீனிக்ஸ் பறவையைப் போல்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானத்துக்கான இந்தப் போரில்
சாவும் ஒரு வெற்றியா?
நிம்மதிக்கான இந்தப் போரில்
நிம்மதிதான் மரணமா?

பேனாப் போரின்
பெறு பேறுகள்
காணாமல் போனதால் களைப்பா?

கூடார்த்த சித்திரம்
கூடாது என்பதனால்
கொள்ளியால் பொசுக்கிக்
கொன்றொழித்தனரோ...

ஹே ஹன்ஸல்லா!
நீ தனித்துப் போனாய்
தலைவன் எங்கே...?

நஜி-அல்-அலியின்
"நா" பேசும்
இன்னும் இன்னும்
இன்னும் இன்னும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதைக்கத் துடிக்க
பதுங்கி இருந்து
உடைத்து எறிந்த
உலுத்தர் செயலை...

உணர்ச்சிப் பிளம்பாய்
உறுமும் பேனா
ஒடிந்த போதும்
உறுமும் பேனா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தணியுமா இந்தத் தாகம்?

ஏழு ஆண்டுகள் ஆச்சு! - இந்த
''ஏழரைச் சனியன்'' எமைப் பிடித்தோச்சி!
கூழுக்கழுகிறது கும்பி - கொண்டை
பூவுக்காய் அழவில்லை தம்பி
மேலுக்கோர்ஆடைதான் வேண்டும் - இந்த
மேனிக்கோ ''சோப்'' தேவை யில்லை!
நாலு எழுத்தும் மறியாதார் - இன்று
நாம் பெற்ற செல்வங்கள் ''அகதிச்சா வடி''யில்
ஆளும்அரசுக்கே சவால் - இந்த
அகதிகள் பிரச்சினை அசங்கிய - வெளவால்
தோள்தட்டி எழுகின்ற உள்ளம் - பாயில்
சோம்பிக் கிடக்கின்ற எமக்கே தான் இல்லை!

துயில் நீங்கி எழுந்திட்டபோது - கொடுந்
துப்பாக்கிக் குழலூடே தொடர்ந்ததே சேதி!
வடபுலத்திருக்கின்ற முஸ்லிம் - ஒன்றும்
வாரிச் சுருட்டாமல் ஓடிவிட வேண்டும்.
இதுவல்ல உங்கள்தா யகம்- இது
எங்களின் மூதாதை ஆண்ட மணபதியே
இருபத்தி நான்கு மணி நேரம் - 'இன்னும்
இருக்கிறது இங்கிருந்து நீங்களோ டுதற்கே!
ஒரு பையில் மாற்றுதற்காடை - மற்றும்
மறுகையில் ''பஸ்ஸுக்கும், ரயிலுக்கும் காசு
வேறொன்றும் தூக்குதல் தடையே - உங்கள்
விரலிலோ காதிலோ நகையேதும் கண்டால்
போர்ப்பறை முழங்கிடக் காண்பீர் - எங்கள்
பொல்லாத ''உயர்பட்ச'' தண்டனை பெறுவீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைகளின் சாவியைத் தருவீர் - நீவீர்
கட்டிய இல்லத்தின் வாசலைத் திறவீர்
பள்ளியைப் 'பாங்கு'டன் மறப்பீர் - அங்கு
பயில்கின்ற ''ஹௌ"லினைக் குளித்தற்குத் தருவீர்
சொல்லியவாறு நீர் நடப்பீர் - எங்கள்
சொல்லினை அலட்சியம் செய்யநீர் நினைத்தால்
கொல்லுவோம் உமைக் கூண்டோடு - உங்கள்
குமருகள் படும்பாடு சொல்லுதற்கில்லை
மெல்லவே சிந்தித் துணர்ந்து - இந்த
மேதினி விட்டு நீர் அரண்டோடிப் போவீர்
இல்லையேல்... எம்குணம் அறிவீர் - இது
எங்களின் இலட்சியப் 'போர்' அதை உணர்வீர்

கட்டளை கேட்ட ஒரு கணத்தில் - கதி
கலங்கியே உடலமும் தடதடத்தாட
பொட்டலம் ஒன்றினைத் தூக்கி
புகுமட்டும் உடுத்தாடை பலவற்றைச் சேர்த்து
கட்டிய ஆடையோ டெழுந்து - கையில்
காசினைக் கொஞ்சம் ''போஸி"னுள் புகுத்தி
முட்டிய கண்ணீரைத் தேக்கி - அதை
முழுதுமாய் சென்னிறக் குருதியாய் ஆக்கி
கட்டிய வீட்டினை நோக்கி - அதில்
கழித்திட்ட நாட்களை நெஞ்சினில் தேக்கி
குட்டிகள் குஞ்சுகள் தூக்கி - சோர்வுக்
குறுகுறு நடையிலே கடற்கரை நோக்கி...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக்கலம் பாய்விரித்தாட - எங்கள்
மனத்தினை பயங்கரப் பேய்பிடித்தாட்ட
தலைக்கணம் திமிர்க்குணம் ஓட - நெஞ்சை
தடுக்கமும் நடுக்கமும் திடுக்கமும் சாட
படகினில் ஏறிய போது - நெஞ்சப்
பந்துகள் குரல்வளை தனில் வந்து மோத
பச்சிளம் பாலகர் கதற - கூனற்
படுமுது கிழவர்கள் பசியினாற் பதற
நிச்சயம் கரை சேருவோமா - என்ற
நினைப்பிலே படகினில் உறைந்துபோய்ச் சாமா
அப்படியிப்படி ஆடி - ஈற்றில்
அலைதனை வென்றுமே கரையேறிற்றம்மா!

கற்பிட்டிக் கரை காணுமுன்னர் - எங்கள்
கண்களும் அகன்றுமே கரைதாண்டிற்றம்மா!
அப்புறம் இப்புறம் புரண்டு - வள்ளம்
ஆடிய ஆட்டத்தால் குடல் தடுமாறி
குப்புறப் புரண்டவர் பல்லோர் - வயிறு
குமட்டியதால் வாந்தி எடுத்தவர் பல்லோர்
சப்பென்று கிடந்தவர் பல்லோர் - காய்ந்த
சருகுபோல் அசைந்துமே பறந்தவர் பல்லோர்
அப்பனை அழைத்தவர் பல்லோர் - வல்ல
அல்லாஹ் அல்லா(ஹ்) என்று அரற்றியோர் பல்லோர்
உப்பலை உடலினைத் தாக்க- நாக்கை
சப்பியே துப்பியே சலித்தவர் பல்லோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மூத்திரம் முடுக்குது" என்று மூக்கால்
முணங்காமல் கடமையை முடித்தவர் பல்லோர்
ஆத்திரம் பீறிட்டதாலே - முதுகில்
அடியொன்றைப் போட்டுமே அடக்கியோர் பல்லோர்
மெல்லவும் விழுங்கவும் முடியா - நிலையில்
மேனியை ஒடுக்கியே தவம் செய்தோர் பல்லோர்
சொல்லவும் வெட்கியே உடலம் - சுருக்கி
சோகத்தை மறைத்துமே சோர்ந்தவர் பல்லோர்
வெள்ளத்தின் வேகத்தைக் கண்டு - கண்கள்
வெட்டாமல் பீதியில் துவண்டவர் பல்லோர்
துள்ளியே எழும் அசுர அலையில் - மேனி
துவண்டுமே துடித்துமே சோர்ந்தவர் பல்லோர்

அத்தனை பேருமா கரையில் - இறங்கி
ஆறுதல் வார்த்தைகள் பரிமாறிக் கொண்டார்
எத்தனை மாந்தரின் உயிர்தாம் - கடலின்
எமனது கயிற்றுக்கு இரையாகிப் போச்சோ
புத்தியும் பேதலித்தந்தோ - சதா
புலம்பியே திரிகின்ற முதியவர் சில்லோர்
மெத்தனமாகவே ஏற்றார் - தம்
மேனியை கடலுக்கு இரையாக்கிப் போட்டார்
கொத்தடிமை பெரும் கோமான் - என்று
கொஞ்சமும் பேதமும் இன்றியே ஆழிக்
கொடுமையை அனுபவித்தாரே இதில்
சமரசம் உலவவிட்டாரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிமுகாம் என்ற பெயரில் - நாட்டில்
அங்கிங்கெனாதபடி எங்கும் குடிசைகள்
அடிப்படை வசதிகள் இன்றி- உள்ளே
அடுப்படி, படுக்கை அறை பேதமின்றி
அமர்தற்கும் "ஹால்" ஒன்று உண்டு- அதனுள்
அழுகின்ற குழந்தைக்குத் தூளியும் வேண்டும்
நெளிகின்ற நோயாளிக் கிழவர் - சற்று
நிம்மதி காணுதற் கொருமூலை வேண்டும்!
பயில்கின்ற பிள்ளையின் பள்ளிப்
பாடங்கள் படித்தற்கும் ஒரு மூலை வேண்டும்
துயில்கின்ற இளம் தம்பதியர்க்கும் - சற்று
சுகம் காண ஏதாவதொரு மூலை வேண்டும்!

மலகூடம், சலகூடம் எல்லாம்- பூமி
மண்மீது அமைகின்ற சிறு மறைப் பொன்றே
பளபள வெனவிடி காலை - ஆங்கு
பஸ்ஸுக்கு நின்றாற்போல் பல மாந்தர் கூட்டம்,
அனைவர்க்கும் அவசரம் உண்டு - ஆனால்
அங்கே இருப்பதோ மலகூடம் ஒன்றே!
ஒருவாறு கடன்களை முடித்து - உள்ள
ஓருடை - மாற்றுடை தனைச்சூடிக் கொள்ள
ஒவ்வொரு வராய் நுழைதல் வேண்டும் - அறையுள்
உள்ளோர்கள் உடனேயும் வெளியேற வேண்டும்
ஒரு முறை குளித்திட நினைத்தால் - அதற்கு
ஒரு மாதம் தவம் செய்து உருமாற வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகையோர் நிலை தொடரும் - இடத்தில்
எழுத்தறிவிக்கவோ பயில் கூடம் இல்லை
மாலையில் பள்ளிக்குச் சென்றால் - அங்கு
மனங்கவர் பாடங்கள் நடப்பதுமில்லை
எப்படியோ கல்வி கற்று - பரீட்சை
எழுதினால் ஒழுங்கான ''ரிஸல்ட்'' டேதுமில்லை
போட்டிப் பரீட்சைக்குச் சென்று - புள்ளி
குவித்தாலும் தொழில்வாய்ப்புக் கொஞ்சம் இல்லை
வதிவிட அத்தாட்சி வேண்டும் - தேர்தல்
வாக்காளர் பட்டியல் பதிவேடும் வேண்டும்
இதையெல்லாம் எங்கே தேடுவதோ - தேடி
எடுத்தாலும் எவர்தான் தொழில் தருவாரோ...?

தணியாது எங்களின் தாகம் - இந்தத்
தரங்கெட்ட வாழ்க்கை மீதெமக்கென்ன மோகம்
இனி மீட்க வேண்டுமெம் பூமி - உடன்
எழுந்து வா சோம்பிக் கிடக்காம லேநீ!

(1990ம் ஆண்டு அக்டோபர் மாதம் தமிழீல விடுதலைப் புலிகள், வடபுலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த முஸ்லிம்கள் அனைவரையும் 24 மணி நேரக் கெடுவில் துப்பாக்கி முனையில் வெளியேற்றினர். ஆண்டுக்கொரு கவிதை வீதம் ஏழு ஆண்டுகளின் பின்னர் எழுந்த கவிதை இது)

-நன்றி: நவமணி 1997

❖❖❖❖❖❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பின்னிணைப்பு....

''தாஜுல் உலூம்'' என்றொரு பட்டம்!

''பல்கலை வேந்தன்'' என்பது அதன் பொருள்!

பெறுமதி மிக்க இந்தப் பட்டத்தை, பெறுமதி மிக்க ஒருவருக்குச் சூட்டி மகிழ்ந்தார் அப்போது முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சராக இருந்த அல்-ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர்.

யாருக்கு எந்தப் பட்டத்தை எந்த வேளையில் எப்படி வழங்க வேண்டுமோ அப்படிச் செய்திருக்கிறார் அஸ்வர். அந்த வல்லமை அவருக்குத்தான் உண்டு. அதனால்தான் அரச கௌரவம் என்பதால் எனக்கு அவர் வழங்கிய விருதையும் நான் ஏற்றுக் கொண்டேன்; கொள்கை ரீதியில் எனக்கும் அவருக்கும் சில முரண்பாடுகள் இருந்தாலும்கூட.

கலை, இலக்கியம் இரண்டும் கலைவாதியின் இரு கண்கள் எனலாம். சிறுகதை, கவிதை, கட்டுரை, நாடகம், நடிப்பு, இசைப்பாடல், சித்திரம், கைப்பணி, மேடைப்பேச்சு, கற்பித்தல் போன்ற சகல துறைகளும் கைவரப் பெற்றவர்தான் கலைவாதி.

வானொலியை வாலாயமாக்கிக் கொண்டவர்.

உரைச்சித்திரம், கலந்துரையாடல், கவியரங்கம், நடிப்பு, பிரதியாக்கம், அறிவிப்பு, நிகழ்ச்சித் தயாரிப்பு என்று நிறையவே சாதித்திருக்கிறார்.

தான், ''**இன்ஸான்**'' பண்ணையில் வளர்ந்தவன் என்று கூறிக் கொள்வதில் பெருமையாம் கலைவாதிக்கு. தனது சிறுகதைத் தொகுப்பான ''ஒரு வெள்ளி ரூபா'' யின் முன்னுரையில் எழுதியிருக்கிறார். என் கண்கள் பனிக்கின்றன.

1960 களில் பிரசுரமான வாரப் பத்திரிகைதான் ''இன்ஸான்'' (மனிதன்) ''அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமில்லை!'' என்பதே இன்ஸானின் தாரக மந்திரம் (Motto) இஸ்லாமிய சோஷலிசத்தைப் பறைசாற்றி நின்றது ''இன்ஸான்''.

அதில் எழுதியவர்தான் கலைவாதி.

நிறையவே!

நிறையவே என்றால் நிறையவேதான்!

1956ம் ஆண்டிலிருந்து எழுதி வருகிறார் கலைவாதி. (44 வருடங்களாக)

தேசிய நாளேடுகள், வாராந்திகள், மாத இதழ்கள், ஆண்டு மலர்கள், தமிழக சஞ்சிகைகள், வானொலியென்று நூற்றுக்கணக்கில் எழுதிக் குவித்திருக்கிறார், ''இன்ஸான்'' தோன்றுவதற்கு முன்னரே!

ஆனால் இன்ஸான் பண்ணையில் வளர்ந்தவன் என்று நெஞ்சு நிமிர்த்திக் கூறிக் கொள்கிறார்; ஏனோ தெரியாது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான், வெளியுலகில் நன்கு துலங்குவதற்கு இன்ஸான்தான் காள்கோலாம்! எனக்கு அதில் உடன்பாடில்லை!

ஆனால்.....

அவர் எழுதிய எழுத்துக்களில், ஒரு பந்தியையாவது, ஒரு வசனத்தையாவது, ஒரு சொல்லையாவது ஏன் ஒரு எழுத்தையாவது வெட்டாமல் பிரசுரித்தவன் நான். அதனால்தான் அப்படிக் கூறுகிறார் போலும்.

ஒரு சொல்லையும் வெட்டாமைக்குக் காரணங்கள் இருந்தன.

ஒன்று, அவருக்கு நான் வழங்கிய எழுத்துச் சுதந்திரம்.

இரண்டு, வெட்டித்திருத்த வேண்டிய எந்தத் தேவையுமின்றி அற்புதமாக எழுதப்பட்டிருக்கும் கருத்தும், சொல்லாட்சியும், சொல்லும் பாங்கும். எல்லாவற்றுக்கும் மேலாக கலைவாதி மீது நான் கொண்டிருந்த நம்பிக்கை!

கலைவாதி இன்ஸானில் நிறையவே எழுதியிருக்கிறார் என்று குறிப்பிட்டேனல்லவா? ஆனால் கலைவாதி என்ற பெயரில் ஒன்றுமே எழுதவில்லை. புனைப்பெயர்கள் பலவற்றில் எழுதினார். சில புனைப்பெயர்கள் அவருடையவை; சிலவற்றை நான் சூட்டினேன்.

''புரட்சிக் கவிஞன் கே!'' என்ற பெயரில் கவிதைகள்

''மன்னிநகர்க் கலீல்'' என்ற பெயரில் சிறுகதைகள்

''மன்னாரான்'' என்ற பெயரில் செய்திகள்

''புரட்சிதாசன்'' என்ற பெயரில் கட்டுரைகள்

முற்போக்கு சிந்தனையே கலீலின் பேச்சு, மூச்சு, எண்ணம் எழுத்தெல்லாம்! இடதுசாரிக் கொள்கை; புரட்சிகரக் கருத்துக்கள்; அதீத வார்த்தைப் பிரயோகங்கள்; பாட்டாளி வர்க்க நிலைப்பாடு; பஞ்சை பராரிகளின் ஆபத்பாந்தவனாக இன்ஸான் பண்ணையில் தடம்பதித்து ஆழக்கால் ஊன்றினார்; அகலக்கால் ஊன்றினார்.

இன்ஸானில் கலீல் எழுதிய சிறுகதைகள் நூலுருப் பெற்றிருக்கின்றன. ''ஒரு வெள்ளி ரூபாய்''. இன்ஸான் கவிதைகள் இன்னும் நூல்வடிவம் பெறவில்லை!

''சகோதரத்துவம்'' என்ற கலீலின், இன்ஸான் கதை, அனைத்துலக இஸ்லாமியத் தமிழாராய்ச்சி மாநாட்டு மலரில் இடம்பெற்றிருந்தது. சிங்களத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்டு ''ராவய'' நாளேட்டிலும் பிரசுரமாகியது. புகழ்பெற்ற சிறுகதை இது.

நான் ஆசிரியராகவிருந்த 'AL-WATHAN' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் ''ஒரு வெள்ளி ரூபாய்'' (One Silver Coin) நூல் பற்றிய விமர்சனம் ஒன்றை எழுதியிருந்தேன். அதில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தேன்,

**'I Offer to Mr. Kaleel One gold Coin (Sovereign) as Present'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலீலின் கவிதைகள் கருத்தியல் வயமானவை.[1] புதிய சிந்தனைகளும், புரட்சிகர நோக்கும் இழையோடும்! கொடுமை கண்டு கொதித்தெழும் ஆவேசம், ஆக்ரோஷமெல்லாம் கவிதையின் அடிநாதமாகும். ஆர்ப்பரித்து எழும் அலைகடலின் ஓசை, சதா இரைந்து கொண்டேயிருக்கும். அதனால்தான் கலீலின் கவிதைகளில் -அது மரபுக் கவிதையாயிருந்தாலென்ன, புதுக் கவிதையாயிருந்தாலென்ன- ஓசைநயம் மெலிதாக ஊஞ்சலாடிக் கொண்டிருக்கும்.

பாரதிதாசனின் வீச்சு இவரது கவிதையின் உயிர்மூச்சாகும்.

மேலும், கலீல் கையாளும் சொற்கள் தனித்துவமானவை. வேறு எந்தத் தமிழ்க்கவிஞரும் கையாளாதவை. இன்ஸானில் வெளியான கவிதைகளைப் படித்தால் புரியும்.

பாலஸ்தீனக் கவிதையொன்றில் இவ்வாறு பாடுகிறார்,

''வில்லெடுத்துப் போர் புரிந்தோம்!
''ஷெல்'' லடித்துப் போர் புரிந்தோம்!
நான்-
சொல்லெடுத்துப் போர் புரிவேன்!
நீ- சிறு
கல்லெடுத்துப் போர் புரிவாய்!''

''கல்'' என்ற கவிதையில் கலீல் கையாளும் சொற்களைக் கவனியுங்கள். வார்த்தைகள் எவ்வாறு ''ரிதிமெற்றிக்கலாக'' விழுகிறது என்று பாருங்கள்.

ஏ ஸியோனிஸ்டே!
கல்லைக் கொண்டு
யானைப் படையைப்
பூண்டோடொழித்த
புரட்சி வரலாறு
எம்மிடம் உளது
ஜாக்கிரதை!!!
ஆயிர மாயிர மாயிரம் யூதர்கள்
அணிதிரண்டாலுமே
ஆயுத மாயுத மாயுத மொன்றுள
அது சிறு கல்லாகுமே!
அது சிறு கல்லாகுமே!

பலஸ்தீனம் பற்றிப் பலர் பாடியுள்ளனர். தமிழ் மொழியில் மிக அபூர்வமாகவே..... பலஸ்தீனக் கவிதைகள் பலவற்றை மொழி பெயர்த்திருக்கிறார்கள் எம்.ஏ. நு'.மானும், பண்ணாமத்துக் கவிராயரும்.

ஆனால் சர்தார், பலஸ்தீனக் கவிதைகள் எதனையும் மொழி பெயர்க்கவில்லலை. தானே எழுதியிருக்கிறார். சற்று வித்தியாசமாக. கூடார்த்த சித்திரத்தைப் பார்த்து அவற்றுக்குக் கவிதை எழுதியிருக்கிறார். அந்தக் காரியத்தைக் கனகச்சிதமாகவே செய்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இன்ஸான்'' பண்ணையை வளர்த்தவர்கள் என்று மூவரைக் கூறலாம். ஒருவர் கலைவாதி. மற்றைய இருவரும் ''பண்ணாமத்துக் கவிராயர்'' எனப்படும் எஸ்.எம். பாறூக்கும், ''வல்லையூர்ச் செல்வன்'' எனப்படும் எம்.எச்.எம். ஷம்ஸ"மாகும். இவர்கள் மூவரும் இல்லாவிட்டால் இன்ஸான் இல்லை என்ற நிலை? அதுதான் உண்மையும் கூட.

நான் கலைவாதியைக் ''கலீல்'' என்றுதான் அழைப்பேன். அவ்வளவு உரிமையும், நெருக்கமும் கலைவாதியுடன்.

கலைவாதி பற்றிய என் கணிப்பீடு இதுதான்:-

கலீல் ஒரு வணங்காமுடி! அஞ்சா நெஞ்சன்! தான் கொண்ட கொள்கையிலிருந்து இம்மி அளவேனும் விட்டுக் கொடுக்காத கொள்கைப் பிடிப்பாளன்; உண்மையான சோஷலிஸ்ட்; மௌட்டீகத்தின் எதிரி; வறுமையோடு கடுஞ்சமர் புரிந்தும் வறுமையில் உழல்பவர்; தீவிர சிந்தனாவாதி; பழக இனியவர்; பண்பாளர்; எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு மாபெரும் மனிதாபிமானி. அவருக்கு எதிரிகள் என்று யாரும் இருந்தால் காழ்ப்புணர்ச்சி காரணமான எதிரிகளாக இருப்பார்களேயொழிய வேறு வகையில் இல்லை.

கலை இலக்கியத் துறையின் பல்வேறு பூதாகரமான அம்சங்களையும், தன்னுள் புதைத்து வைத்துக் கொண்டு பலவற்றை வெளிக்காட்டியும், சிலவற்றை வெளிக்காட்டாமலும் திணறிக் கொண்டிருக்கும், தனது ''மைக்ரோபோனிக்'' குரல் வளத்தால் வானலைகளில் நேயர்களை வாரி இழுத்துக் கொண்டிருக்கும், எத்தகைய சிக்கலான கருத்துக்களையும் வேகத்துடனும், விவேகத்துடனும் எழுத்தாக வடித்துத் தந்து கொண்டிருக்கும், சுறுசுறுப்பான ஆரோக்கியமான, களைப்பே அற்ற ஓர் அற்புத சிருஷ்டி கர்த்தா கலீல் என்றால் அது மிகைப்பட்ட கூற்றன்று.

கலீலைப் புரிந்து கொள்வோர், புரிந்துகொண்டோர் தொகை குறைவு. காலந்தான் கலீலின் ஆற்றல்களைப் புரியாதவர்களுக்குப் புரியவைக்கும்.

அரசியல், சமூக பொருளாதார ரீதியில் தொடர்ச்சியாகப் பழிவாங்கப்பட்டவர்தான் கலீல். ஆனால் அவற்றையெல்லாம் எதிர்கொண்டு, எதிர்நீச்சல் போட்டு பெரும்பாலான விடயங்களில் வெற்றிவாகை சூடியிருக்கிறார்.

சிந்தனாவாதியான கலீலுக்கு எத்தனையோ எண்ணங்கள்; ஏக்கங்கள்; எதிர்பார்ப்புக்கள். இன்றைய சமூக கட்டமைப்பில் அவை நிறைவேறக் கூடியதல்ல.

கலீலின் கருத்தோவியங்களுக்குக் காலம்தான் பதில் தர வேண்டும்!

**அபூதாலி:ப் அப்துல் லதீ:ப்**
முன்னாள் ஆசிரியர் ''இன்ஸான்'', AL-WATHAN

R 15565

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைவாதி யார் ?

மன்னார் மண்ணின் மைந்தனான கலைவாதி, ஓர் அற்புதமான சிருஷ்டி கர்த்தா, பல்கலை வேந்தன் (தாஜுல் உலூம்) என்ற பட்டத்துக்கு முற்றிலும் பொருத்தமான கலைவாதியின் கலை, இலக்கியப் பங்களிப்பை விபரிப்பதெனில் இப் பின்னட்டை போதா!

கலைவாதியின் சாதனைகளிற் சில.....

மூன்று நூல்கள், ஐம்பது சிறுகதைகள், மூன்று நாவல்கள் நூற்றுக் கணக்கான கவிதைகள் - கட்டுரைகள், மற்றும் நூல் ஆய்வுகள் விமர்சனங்கள்!

பல பத்திரிகைகளின் பக்கங்கள், (பத்திகள்) கலைவாதியின் கைவண்ணத்தால் மிளிர்ந்துள்ளன.

திரைகடல் (ஈழநாடு) திரைத்திராட்சை, திரைப்பூக்கள் (சிரித்திரன்), சந்தனப் பேழை (தினகரன்) இஸ்லாம் எங்கள் வழி! இன்பத்தமிழ் எங்கள் மொழி (பாமிஸ் மாசிகை) ஜலதரங்கம் (தினகரன்) மணி ஆரம் (நவமணி).

வானொலித் தொடர் நிகழ்ச்சிகள்:-

இலக்கிய மஞ்சரி, சதுரச் சங்கமம், இலக்கியக் களஞ்சியம், நூல் உலா. சஞ்சிகைகள் சிறப்புமலர்கள் சிலவற்றின் ஆசிரியராக...... கலைக்கடல், மக்கள், முகில், தேசிய மீலாத் மலர்கள், வாழ்வோரை வாழ்த்துவோம் (1991,92,93,94).

கலைவாதி வெற்றிகரமாக நடாத்திய மாநாடுகள், விழாக்களில் குறிப்பிடத்தக்க சில மட்டும்.

எழுத்தாளர் கலைஞர் மாநாடு (திருகோணமலை) அனைத்திலங்கை இளம் கவிஞர் மாநாடு (மன்னார்) இச் நூற்றாண்டு விழா (மன்னார்) மனித உரிமைகள் சர்வதேசச் சிறுவர் சித்திரக் காட்சிகள், ஒரே மேடையில் நாடகம் (மன்னார்) கறுப்பு அக்டோபர் (அகதிகள்) கருத் காட்சி (கொழும்பு பொது நூலகம்) மாதாந்தப் பௌர்ண கலைவிழாக்கள் (மன்னார்)

"கலாபூஷன" கலைவாதி கலீலின் உணர்ச்சித் தீப் பிளம்பே இக்கவிநூல்

\- மன்னார் வாசகர் வட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org